DINA MANI
Date. 28/11/2018

# தீவிரமடையும் பிளாஸ்டிக் பொருள்கள் தடுப்பு நடவடிக்கை

## மாற்றுப் பொருள்கள் பயன்பாடு அதிகரிப்பு

என்.தமிழ்செல்வன்

வேலூர்,நவ.27: தமிழக அரசின் உத்தரவை அடுத்து வேலூர் மாவட்டத்தில் தடை செய்யப் பட்ட பிளாஸ்டிக் பொருள்கள் மீதான தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. இதன்தொடர்ச்சியாக, கடைகள், வர்த்தக நிறுவனங்கள் உள்ளிட்டவற்றில் பிளாஸ்டிக் பொருள்களைத் தவிர்த்து மாற்று உபயோகப் பொருள்களின் பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

சுற்றுச்சூழல் பாதிப்பைக் கருத்தில் கொண்டு ஜனவரி 1-ஆம் தேதி முதல் பிளாஸ்டிக் பொருள்களை தயாரித்தல், விற்பனை செய்தல், சேமித்து வைத்தல், பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு தமிழகம் முழுவதும் தடை விதித்து தமிழக அரசு கடந்த ஜூன் மாதம் உத்தரவிட்டது. இதையடுத்து சுற்றுச்சூழல் துறை சார்பில் 2019 ஜனவரி 1 முதல் 14 வகையான பிளாஸ்டிக் பொருள்களை பட்டியலிட்டு அவற்றை தடை செய்து அரசாணை வெளியிட்டது.

இதுதொடர்பாக, மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் தீவிர விழிப்புணர்வு நடவடிக்கைகளால் வேலூர் மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் தற்போது தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களின் உற்பத்தி, விற்பனை குறைந்து மாற்று பொருள்களான துணிப் பைகள், காகித உறைகளின் பயன்பாடு அதிகரித்து வருகின்றன. குறிப்பாக, பலசரக்குக் கடைகளில் காய்கறிகள், மளிகைப் பொருள்களை வாங்கும்போது பிளாஸ்டிக் பைகளைத் தவிர்த்து துணிப் பைகளில் வழங்குவது, உணவகங்களில் உணவுகளை வாழை இலைகள், அலுமினிய பூச்சுக் கொண்ட காகிதங்களில் கட்டித் தருவது, தேநீர் கடைகளில் காகித டம்ளர்கள் என பெரும்பாலான இடங்களில் பிளாஸ்டிக் பொருள்களின் பயன்பாடு குறைந்துள்ளது.



பிளாஸ்டிக் அல்லாத பொருள்களால் தயாரிக்கப்பட்ட ஓட்டல்களில் பயன்படுத்தப்படும் தட்டுகள்.

எனினும், தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்கள் பயன்பாடு முழுமையாக குறையவில்லை என்று வேலூர் நேதாஜி மார்க்கெட் அனைத்து வியாபாரிகள் சங்கச் செயலர் பிச்சாண்டி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது:

20 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வந்த பிளாஸ்டிக் பொருள்களை திடீரென நிறுத்துவதை ஏற்க இயலாதது. எனினும், சுற்றுச்சூழல் பாதிப்பு, அரசு உத்தரவைக் கருத்தில் கொண்டு வியாபாரிகள் அவற்றை தவிர்த்து வருகிறோம். அதேசமயம், மக்களிடம் போதிய மாற்றம் ஏற்படாததால் பொருள்களை பிளாஸ்டிக் பைகளில் அளிக்கும் கடையை நாடிச் செல்வது நீடிக்கிறது. இதனால், வர்த்தக பாதிப்பு கருதி வியாபாரிகளும் பிளாஸ்டிக் பொருள்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. மக்களிடம் மாற்றம் ஏற்படும் போது பிளாஸ்டிக் பொருள்கள் பயன்பாடு முழுமையாக குறையக்கூடும் என்றார் அவர்.

இதுகுறித்து வேலூர் வணிகர் சங்கச் செயலர் ஆர்.பி.ஞானவேலு கூறியது:

பிளாஸ்டிக் பொருள்களுக்கு தடை விதிப்பதை வரவேற்கிறோம். ஆனால், எந்தெந்த பொருள்களுக்கு தடை என்பதை அரசு தெளிவுபடுத்தவில்லை. இதனால், மளிகைக் கடைகளில் உணவுப் பொருள்கள் வைத்துள்ள பாக்கெட்டுகளையும் தவிர்க்க அதிகாரிகள் அறிவுறுத்துகின்றனர். ஆனால், சுற்றுச்சூழல் அரசாணையில் அதற்கு விலக்கு உள்ளது.

எனவே, தடை செய்யப்படும் பிளாஸ்டிக் பொருள்கள் குறித்து அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றார் அவர்.

இதுகுறித்து, மாவட்ட உணவுப் பாதுகாப்பு அலுவலர் வெங்கடேஷ் கூறியதாவது:

பட்டியலிடப்பட்டுள்ள 14 வகையான பிளாஸ்டிக் பொருள்களை அக்டோபர் 1-ஆம் தேதிக்கு பிறகு உற்பத்தி செய்வது, விற்பனை செய்வதைத் தவிர்க்க அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதன் காரணமாக, தற்போது அவற்றின் பயன்பாடு படிப்படியாக குறைந்து வருகிறது. ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்டிருந்த, வாங்கி வைக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் பொருள்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

அவையும் ஜனவரி 1-ஆம் தேதிக்குப் பிறகு முழுமையாக தடுக்கப்பட்டுவிடும். மளிகை கடைகளில் பொட்டலம் செய்துள்ள பிளாஸ்டிக்குகளுக்கு தடை இல்லை. இதுதொடர்பாக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும் என்றார் அவர்.